17.09.2025

அ.வ.எண். 38/2019

பி.சா.2 – கிருஷ்ணவேணி (எ) செல்வி, த/பெ. சாமிநாதன்

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 17.09.2025 is accordance with the provision of Act X of 3331

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. வாதியின் சொத்துக்கு மேல்புறமாக எனது சொத்து உள்ளது. வாதி அவரது மேல்புற சுவற்றை பராமரிக்க இடையூறு செய்யக்கூடாது என இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். வாதி சுவற்றுக்கு மேல்புறமாக 2 அடி தடம் இல்லை என கூறுகிறேன் என்றும், நீதிமன்ற ஆணையர் அறிக்கையின்படி வாதிக்கு 2 அடி தடம் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளதால் மேற்படி 2 அடி பொறுத்து எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரியல்ல. 2 அடி தடத்தில் போவதற்கில்லாமல் நான் கட்டைகளை கொண்டு அடுக்கி தடுத்து வைத்துள்ளேன் என்றால் அது முன்பாகவே இருந்தது.

2. 2 அடி வாதிக்கு பாத்தியப்பட்ட நிலையில் நான் அந்த கட்டைகளை எடுத்துகொள்ள தயாராக உள்ளேனா என்றால் சரிதான், ஆனால் அது அவருடைய இடம் இல்லை. வாதி, அவரது மேல்புற சுவற்றில் 2 அடி SUN SHADE விட்டுள்ளார் என்றால் சரிதான். வாதியின் சொத்துக்கு மேல்புறமாக 2 அடி இடம் உள்ளது என்றும் மேல்புற சுவற்றை பராமரிப்பதற்கு பிரதிவாதிகள் இடையூறு செய்கின்றனர் என்றால் சரியல்ல. வாதிக்கு இடம் இருந்தால் எடுத்து கொள்ளலாம். வாதிக்கு பாத்தியப்பட்ட இடத்தை இடையூறு செய்கிறோம் என்றும், நாங்கள் அடுக்கி வைத்துள்ள கட்டைகளை எடுக்க கடைமைப்பட்டவர்கள் என்றால் வாதியின் இடமாக இருந்தால் எடுத்துக்கொள்ளலாம்.

மறுவிசாரணை இல்லை.

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur